
**ஆகஸ்ட் – 21**

# TNPSC துளிகள்

- நீரஜ் கய்வானின் "Homebound" திரைப்படம் 2025 ஆம் ஆண்டு மெல்போர்ன் இந்தியத் திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த இயக்குனருக்கான விருதை வென்றது.
- கொல்கத்தாவின் GRSE நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட நான்கு ஆய்வுக் (பெரிய) கப்பல்களில் மூன்றாவது கப்பலான இக்சக் (யார்டு 3027) இந்தியக் கடற்படையிடம் வழங்கப்பட்டது.
  - முதல் இரண்டு கப்பல்களான INS சந்தயக் மற்றும் INS நிர்தேசக் ஆகியவை 2024 ஆம் ஆண்டில் படையில் இணைக்கப்பட்டன.
- அமைச்சர் H.D. குமாரசாமி பாரத் ஸ்டீல் மாநாட்டின் முத்திரைச் சின்னம், வலைத்தளம் மற்றும் சிற்றேட்டைப் புது டெல்லியில் வெளியிட்டார்.
  - பாரத் ஸ்டீல் என்பது எஃகு மற்றும் கனரக தொழில்துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதன்மையான சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி ஆகும்.
- எல்லைப் பாதுகாப்புப் படையின் குரூப் B மற்றும் C பணியாளர்களின் முதல் படைப் பிரிவு மதிப்பாய்வை அரசாங்கம் அங்கீகரித்தன் மூலம் 23,710 உடனடிப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.
  - சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு 8,000க்கும் மேற்பட்ட பதவி உயர்வு ஆணைகள் வழங்கப் பட்டன.
- டிரினிடாட் மற்றும் டொபாகோவில் கண்டுபிடிக்கப்பட்ட எஃகுப் பறை எனப்படும் ஓர் இசைக் கருவியைக் கொண்டாடும் வகையில் ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று உலக எஃகுப் பறை தினம் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சோழர் காலக் கல்வெட்டுகள் – கரூர்



- கரூர் மாவட்டத்தில் உள்ள சங்கரன்மலை பகுதியில் மூன்று சோழர் காலக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இந்தக் கல்வெட்டுகள் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் (1178–1218) ஆட்சிக் காலமான 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

- இந்தத் தமிழ் கல்வெட்டுகளில் 38 வரிகள் உள்ளன.
- எல்லைகள், கிணறு மற்றும் மரங்கள் உட்பட கோயில் பராமரிப்புக்கான நில தானங்களின் விவரங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- மேலும் காலிங்கராயன், கச்சிராயன் மற்றும் விழுபத்ராயன் போன்ற சிற்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
- ஒரு காளை மற்றும் மனிதர்களின் சிற்பங்களும் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. அவை மனிதப் பலியைக் குறிக்கும் அடையாளங்களுடன் கூடியதாக உள்ளதால் பழமையானதாக கருதப்படுகிறது.
- இந்த மலையானது கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்காவின் சித்தலவாய் பஞ்சாயத்தில் அமைந்துள்ளது.

## முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று, தமிழக முதல்வர் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் தொழில் தொடங்குவதற்கு உதவுகிறது.
- மூலதனத் தேவைகளுக்காக 1 கோடி ரூபாய் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது.
- 30% மூலதன மானியம் மற்றும் 3% வட்டி மானியம் வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தில் தொழில்முனைவோர் திறன் பயிற்சியும் சேர்க்கப்பட்டுள்ளது.
- இரண்டு ஆண்டுகளில் சுமார் 400 ஒய்வு பெற்றப் பணியாளர்கள் இதன் மூலம் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# தேசியச் செய்திகள்

## சொத்து மதிப்பீட்டுக் கட்டமைப்பு 2025

- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, டிஜிட்டல் இணைப்புகளுக்கான இந்தியாவின் முதல் சொத்து மதிப்பீட்டுக் கட்டமைப்பை

அறிமுகப்படுத்தியது.

- டிஜிட்டல் இணைப்புகளுக்கான சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான கையேடு, அதிவேக இணையத்திற்கான கட்டடங்களின் தயார்நிலையை மதிப்பிடுவதற்கான ஒரு தரத்தை நிர்ணயிக்கிறது.
- இந்தியாவில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட கைபேசி இணையத் தரவுகள், 4G மற்றும் 5G சமிஞ்ஞைகள் பெரும்பாலும் பலவீனமடையும் இடங்களில் நுகரப்படுகிறது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது, கம்பி இழை இணைப்பிற்கான தயார்நிலை, கைபேசிப் பயன்பாட்டின் பரவல், அருகலை (வைஃபை) அணுகல், அகலப் பட்டை இணைய சேவை (பிராட்பேண்ட்) வேகம் மற்றும் பயனர் அனுபவத்தை மதிப்பிடுகிறது.
- மின்சாரம் மற்றும் தண்ணீருடன் எண்ணிமச் சேவை இணைப்பை ஓர் அத்தியாவசிய சேவையாக மாற்றுவதை TRAI நோக்கமாகக் கொண்டுள்ளது.





## சர்வோத்தம் யுத் சேவா பதக்கம் 2025



- உயர் இராணுவ அதிகாரிகள், ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று சிந்தூர் நடவடிக்கைக்காக சர்வோத்தம் யுத் சேவா பதக்கத்தினைப் பெற்றனர்.
- பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக மே 07 ஆம் தேதியன்று சிந்தூர் நடவடிக்கை தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டு முதன்முறையாக விமானப்படை அதிகாரிகளுக்கும் சர்வோத்தம் யுத் சேவா பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.
- லெப்டினன்ட் ஜெனரல் பிரதிக் சர்மா, லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் காய், வைஸ் அட்மிரல் சஞ்சய் ஜஸ்ஜித் சிங் (ஓய்வு), ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி, ஏர் மார்ஷல் நாகேஷ் கபூர், ஏர் மார்ஷல் ஜீதந்திர மிஸ்ரா மற்றும் ஏர் மார்ஷல் A.K. பாரதி ஆகியோர் இந்தப் பதக்கத்தினைப் பெற்றனர்.
- இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட மொத்தம் 36 விமான வீரர்கள் அவர்களின் துணிவு மற்றும் திறமைக்காக பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## இந்தியாவில் E20 பெட்ரோல் 2025




- பொருளாதார நன்மைகள் மற்றும் உமிழ்வுக் குறைப்பு ஆகியவற்றினை இலக்காகக் கொண்டு, நாடு தழுவிய அளவில் E20 பெட்ரோல் (20% எத்தனால் கலவை) அறிமுகத்தினை இந்தியா விரைவுபடுத்தியது.
- கரும்பு மற்றும் தானியங்களிலிருந்துப் பெறப்படும் எத்தனால், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதோடு, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துகிறது (2025 ஆம் ஆண்டில் 43,000 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது).
- E10 உடன் ஒப்பிடும்போது E20 ஆனது கார்பன் உமிழ்வை 30% வரை குறைக்கிறது; அதிக ஆக்டேன் உள்ளடக்கம் ஆனது எரிப்புத் திறனை மேம்படுத்துகிறது மற்றும் என்ஜினில் முறையற்ற எரிப்பு (என்ஜின் நாக்கிங்) நிகழ்வதைக் குறைக்கிறது.
- ஆனால் நவீன கால கார்களில் எரிபொருள் திறன் 5-7% குறையக் கூடும்; பழைய வாகனங்களில் (BS3/BS4) 20% வரை குறையக் கூடும்.
- இந்த எரிபொருள் பயன்பாட்டிற்குப் பொருந்தாத வாகனங்களில் எத்தனால் ஆனது இரப்பர் சீல்கள் மற்றும் பாகங்களைச் சேதப்படுத்தும் என்றாலும் அதற்கான பாகம் மாற்றுச் செலவுகள் குறைவாகவே இருக்கும்.

- புதிய கார்கள் (BS6 கட்டம் 2, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பிந்தைய மாதிரிகள்) பெரும்பாலும் E20 பெட்ரோல் பயன்பாட்டிற்கு தயாராக உள்ளன.
- E20 பெட்ரோல் பயன்பாட்டிற்கான மாற்றத்தின் போது எத்தனாலுக்கு இணக்கமான பாகங்களின் வழக்கமான பராமரிப்பு மற்றும் பயன்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.
- அதிகாரிகள் E20 பெட்ரோலினை தூய்மையான மின்சாரப் போக்குவரத்தினை நோக்கிய "இணைப்பு எரிபொருள்" என்று அழைக்கின்றனர்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஐக்கியப் பேரரசு இடையிலான வர்த்தக ஒப்பந்தம் 2025





- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் 2025 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதியன்று விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் (CETA) கையெழுத்திட்டன.
- மேலும், இந்த ஒப்பந்தத்தில் டிஜிட்டல் வர்த்தகம் குறித்த ஒரு பிரத்யேக அத்தியாயமும் இடம் பெற்றுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது, மின்னணு கையொப்பங்கள் மற்றும் ஒப்பந்தங்களை அங்கீகரிக்கிறது என்பதோடு மேலும் இரு தரப்பினரும் பரஸ்பர அங்கீகாரத்தை நோக்கிச் செயல்பட உறுதியளிக்கிறது.
- இது காகித அறிக்கையிடல் சார்ந்த வேலைகளைக் குறைத்து சீரான மென்பொருள் ஏற்றுமதிகளை எளிதாக்குகிறது.
- இந்த ஒப்பந்தமானது, மின்னணுப் பரிமாற்றங்களில் சுங்க வரி ரத்தினை உறுதி செய்கிறது என்பதோடு இது 30 பில்லியன் டாலர் மதிப்பிலான மென்பொருள் ஏற்றுமதிச் சந்தையைப் பாதுகாக்கிறது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## எஸ்கெரிச்சியா கோலே பாக்டீரியா

- அறிவியலாளர்கள் எஸ்கெரிச்சியா கோலே பாக்டீரியாவை மின் சமிக்ஞைகளை உருவாக்கும் சுய ஆற்றலில் இயங்கும் வேதியியல் உணரிகளாக செயல்படச் செய்யும் வகையில் மரபணு ரீதியாக மாற்றியமைத்துள்ளனர்.
- இந்த பாக்டீரியாவானது குறிப்பிட்ட இரசாயனங்களைக் கண்டறிந்து, சமிக்ஞைகளைச் செயலாக்கி, அளவிடக் கூடிய மின்னூட்டங்களை உருவாக்கும் பினாசின்களை உருவாக்குகிறது.
- இந்த முன்னேற்றம் ஆனது, குறைந்த விலை, நிரல்படுத்தக்கூடிய உயிரி உணர்விகளை (பயோசென்சர்) மின்னணு சாதனங்களுடன் நேரடியாக ஒருங்கிணைக்க உதவுகிறது.





## அணுசக்தியால் இயங்கும் சீர்வேக எறிகணை – ரஷ்யா



- ரஷ்ய நாடானது, நோவயா ஜெம்லியாவில் அணுசக்தியால் இயங்கும் 9M730 பியூரெவெஸ்ட்னிக் எனும் சீர்வேக எறிகணையை பரிசோதிக்க தயாராகி வருகிறது.
- இந்த எறிகணை அதன் உந்துதலுக்கு ஓர் அணு உலையைப் பயன்படுத்துகிறது, இதனால் அது வரம்பற்றத் தாக்குதல் தூரத்தையும் உலகளாவிய தாக்கும் திறனையும் கொண்டுள்ளது.
- இந்தச் சோதனையைக் கண்காணிக்க ரோசாட்டம் நிறுவனத்தின் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன.
- இந்தச் சோதனை மண்டலத்திற்கு அருகில் வெளிவரும் கதிர்வீச்சு மற்றும் செயல்பாட்டைக் கண்காணிக்க அமெரிக்கா அதன் WC-135R "nuke sniffer" எனும் நுகர்விக் கருவியை அனுப்பியது.
- உக்ரைன் போர் குறித்த புடின்-டிரம்ப் சந்திப்புக்கு முன்னதாக இந்தச் சோதனை நடைபெற உள்ளது.

## ஐடியோனெல்லா சகாய்யென்சிஸ்




- ஐடியோனெல்லா சகாய்யென்சிஸ் என்பது ஐடியோனெல்லா இனத்தைச் சேர்ந்த தண்டு வடிவ கிராம் நெகட்டிவ் பாக்டீரியா ஆகும்.
- இது பாலிஎத்திலீன் டெரெப்தாலேட் (PET) நெகிழிகளை உடைத்து, அதன் கார்பன் மற்றும் ஆற்றல் மூலமாக உட்கொள்ள முடியும்.
- இந்தப் பாக்டீரியமானது ஜப்பானில் PET- மாசுபட்ட மண்ணில் கண்டுபிடிக்கப்பட்டது என்ற நிலையில் மேலும் இது மண் மற்றும் கழிவுநீர்க் கசடு போன்ற ஆக்ஸிஜன் நிறைந்த, ஈரமான சூழல்களில் செழித்து வளர்கிறது.
- இது PET நெகிழிகளை அந்த பாக்டீரியம் மற்றும் பிற நுண்ணுயிரிகள் உட்கொள்ளக் கூடிய சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத ஒருபடித்தான சேர்மங்களாகச் (மோனோமர்களாக) சிதைக்கிறது.

## கடவுச்சொல் கொண்டு காக்கப்பட்ட மூளை தரவு

- அமெரிக்காவின் ஸ்டான்போர்டு அறிவியலாளர்கள், பயனர்கள் முன்னமைக்கப்பட்ட கடவுக் குறியீட்டினைப் பற்றி நினைக்கும் போது மட்டுமே செயல்படுத்தப்படுகின்ற ஒரு மூளை-கணினி இடைமுகத்தினை (BCI) உருவாக்கியுள்ளனர்.
- BCI ஆனது, மூளை சமிக்ஞைகளில் பயிற்சி பெற்ற செயற்கை நுண்ணறிவு

மாதிரிகளைப் பயன்படுத்திப் பயனர்கள் கற்பனை செய்யும் வாக்கியங்களை (உள்ளகப் பேச்சை) மறுகுறியாக்கம் செய்து உரை அல்லது ஒலியாக மாற்றுகிறது.

- உள்ளகப் பேச்சு பலவீனமான சமிக்ஞைகளை உருவாக்கினாலும், இது பேசப்படும் மற்றும் கற்பனை செய்யப்படும் பேச்சு ஆகிய இரண்டும் உருவாகின்ற பெருமூளைப் புறணியில் இருந்து வரும் சமிக்ஞைகளில் கவனம் செலுத்துகிறது.
- இந்த அமைப்பு ஆனது கற்பனை செய்யப்பட்ட வாக்கியங்களில் 74 சதவீதத்தினை சரியாகக் காட்டியது மற்றும் "Chitty-Chitty-Bang-Bang" என்ற சிந்தனை சார்ந்த கடவுக் குறியீட்டினை 98% துல்லியத்துடன் அடையாளம் கண்டது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### இரண்டு புதிய ஊசித்தட்டான் இனங்கள்




- மகாராஷ்டிரா மற்றும் கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இரண்டு புதிய ஊசித்தட்டான் இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- கொங்கண் ஷேடோடாம்செல் ஆனது மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் மாவட்டத்தில் கண்டறியப் பட்டுள்ளது.
- கிரிம்சன் ஷேடோடாம்செல் (புரோட்டோஸ்டிக்டா சாங்குனிதோராக்ஸ்) கேரளாவின்

திருவனந்தபுரம் மாவட்டத்தில் கண்டறியப்பட்டது.

- இந்த இரண்டு இனங்களும் முன்பு செந்நிறப் புள்ளிகள் கொண்ட ஷேடோடாம்செல் (புரோட்டோஸ்டிக்டா சாங்குயினோஸ்டிக்மா) என்று தவறாகக் கருதப்பட்டன.
- இந்த ஷேடோடாம்செல்கள் நல்ல நிழல் கொண்ட, அழகிய வன வாழ்விடங்களில் செழித்து வாழ்கின்றன ஆனால் வாழ்விட இழப்பு மற்றும் தோட்ட வளர்ப்பு காரணமாக அவை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.

## ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் முதன்முறையாக ஓர் அரிய இரவு நேரங்களில் வாழ்கின்ற ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா எனும் அந்துப்பூச்சி கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த மாதிரியானது, கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள சூலன்னூர் மயில் சரணாலயத்தில் கண்டறியப்பட்டது.
- நோக்டுயிடே குடும்பத்தைச் சேர்ந்த இந்த அந்துப்பூச்சி இனமானது முன்னர் வட கிழக்கு இந்தியாவில் மட்டுமே காணப்படுவதாக அறியப்பட்டது.
- ஒரு விரிவான பகுப்பாய்வு ஆனது இந்த இனத்தினை ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா சைக்ளிகா என்ற துணை இனமாக அடையாளம் கண்டது.



## புதிய பனை இனங்கள்

- ஹார்டஸ் மலபாரிகஸ் ஆய்வின் மீதான மீள் பார்வை மூலம் இந்தியாவில் ஒரு புதிய பனை இனம் கண்டறியப்பட்டது.
- 17 ஆம் நூற்றாண்டில் விவரிக்கப்பட்ட கட்டோ-இன்டெல் பனை, பீனிக்ஸ் சில்வெஸ்ட்ரிஸ் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- பீனிக்ஸ் சில்வெஸ்ட்ரிஸ் ஆனது கேரளா மற்றும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டது மற்றும் 3.5 முதல் 5.5 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது.
- கிழக்கு இந்தியா, வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தானில் பீனிக்ஸ் ராக்ஸ்பர்கி என்ற புதிய இனம் அடையாளம் காணப்பட்டது.
- பீனிக்ஸ் ராக்ஸ்பர்கி 12 முதல் 16 மீட்டர் உயரம் வரை வளரக் கூடிய, தனித்த தண்டு மற்றும் பெரிய பழங்களைக் கொண்டது.

- இந்த ஆய்வு P. புசில்லா, P. ஃபரினிஃபெரா மற்றும் P. ஜெய்லானிகாவை பீனிக்ஸ் சில்வெஸ்ட்ரிஸ் என மறுவகைப்படுத்தியது.
- பீனிக்ஸ் ராக்ஸ்பர்கி என்ற இனத்தின் பெயர் தாவரவியலாளர் வில்லியம் ராக்ஸ்பர்க்கை கௌரவிக்கும் விதமாக வழங்கப்பட்டது.




# மாநிலச் செய்திகள்

## நுகர்வோர் குறைதீர்வு விகிதம்





- பத்து மாநிலங்களும் தேசிய நுகர்வோர் குறை தீர்வு ஆணையமும் (NCDRC) ஜூலை மாதத்தில் 100 சதவீதத்திற்கும் அதிகமான வழக்குத் தீர்வு விகிதத்தை அடைந்தன.
- NCDRC ஆனது 122% குறை தீர்வு வழங்கல் விகிதத்தைப் பதிவு செய்தது.
- தமிழ்நாடு 277% உடன் முன்னிலை வகித்தது, அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் 214% மற்றும் தெலுங்கானா 158% விகிதங்களைக் கொண்டுள்ளன.

- இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகியவற்றில் தலா 150% என்ற விகிதமும், மேகாலயாவில் 140% என்ற விகிதமும் பதிவாகின.
- இ-ஜாக்ரிதி தளம் தொடங்கப்பட்டதிலிருந்து, வெளிநாடுவாழ் இந்தியர்கள் உட்பட இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பயனர்கள் அதில் பதிவு செய்துள்ளனர்.
- இந்த ஆண்டு, இந்தத் தளத்தின் மூலம் 85,531 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நுகர்வோர் விவகாரத் துறையால் தொடங்கப் பட்ட இ-ஜாக்ரிதி தளம் ஆனது, குறை தீர்க்கும் கட்டமைப்பினை மேலும் பரிமாற்றியுள்ளது.

# முக்கிய தினங்கள்

## தேசிய நூலகர்கள் தினம் 2025 - ஆகஸ்ட் 12




- 1962 ஆம் ஆண்டு முதன்முதலில் அனுசரிக்கப்பட்ட தேசிய நூலகர் தினம் ஆனது, இந்தியாவில் நூலக அறிவியலின் தந்தை டாக்டர் S.R. இரங்கநாதனின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இவர் தஞ்சாவூரின் சீர்காழியில் 1892ஆம் ஆண்டு ஆகஸ்டு 9ஆம் தேதியன்று பிறந்தார்.
- இவரின் சுயசரிதையானது, அவரது காலத்திலேயே A Librarian Looks Back என்ற பெயரில் தொடராக வெளிவந்தது.
- மேலும் இவர் "The Five Laws of Library Science" எனும் நூலையும் எழுதியுள்ளார்.
- எழுத்தறிவு, கல்வி மற்றும் தகவல் அணுகலை மேம்படுத்துவதில் நூலகர்களின் பங்கை இந்தத் தினம் கௌரவிக்கிறது.

## உலக மனிதாபிமான தினம் 2025 - ஆகஸ்ட் 19

- இத்தினமானது, உலகெங்கிலும் உள்ள மனிதாபிமான ஊழியர்களின் துணிவையும் அர்ப்பணிப்பையும் கௌரவிக்கிறது.
- 2003 ஆம் ஆண்டு ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள கால்வாய் தாங்கும் விடுதியில் நடைபெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, 2008 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள்

சபையால் இத்தினம் நிறுவப்பட்டது.

❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Strengthening global solidarity and empowering local communities" என்பதாகும்.




## இதரச் செய்திகள்

### ஆஸ்ட்ராலோபிதேகஸ் புதைபடிவம்




❖ எத்தியோப்பியாவின் அஃபார் பிராந்தியத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபடிவமாகிய பற்கள், சுமார் 2.6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு மனித மூதாதையர் இனங்கள் இணைந்து வாழ்ந்ததை வெளிப்படுத்துகின்றன.

❖ இந்தக் கண்டுபிடிப்பில் முன்னர் அறியப்படாத ஆஸ்ட்ராலோபிதேகஸ் (தெற்கத்திய மனிதன்) இனத்தின் 10 பற்களும், ஆரம்பகால ஹோமோ இன நபர்களின் 3 பற்களும் அடங்கும்.

❖ ஹோமோ இனம் தோன்றுவதற்கு முன்பு ஆஸ்ட்ராலோபிதேகஸ் இனங்கள் மறைந்து விட்டன என்ற பழைய கருத்திற்கு இது சவால் விடுக்கிறது.

❖ இந்த காலக் கட்டத்தில் கிழக்கு ஆப்பிரிக்காவில் குறைந்தது ஐந்து ஹோமினின் இனங்கள் ஒன்றாக வாழ்ந்ததாக இந்தக் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★